


# ஒன்டாரியோ குழந்தைகள் நடவடிக்கை வரி வரவு

ஹாக்கியிலிருந்து மொழி கற்கும் வகுப்புகள் வரை, உங்கள் குழந்தை எதில் ஈடுபட்டிருந்தாலும் வரி வரவைப் பெறுங்கள்.

ontario.ca/kidscredit

Ontario

## குழந்தைகளின் நடவடிக்கைகளுக்கான உலகம் ஒன்று இருக்கிறது!

ஒன்டாரியோவின் புதிய குழந்தைகள் நடவடிக்கை வரி வரவு நீங்கள் உங்கள் குழந்தையைப் போட்டி விளையாட்டுகள், கலைகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்ய வைப்பதை உங்களுக்கு சுலபமாக்குகிறது.அவர்களின் மனதையும் உடலையும் சுறுசுறுப்பாக்கி அவர்கள் மேம்பட உதவுகிறது.

- பெற்றோர்களும் காப்பாளர்களும் 16 வயதுக்குக் கீழுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் 50 டொலர்கள் வரையிலும் அல்லது 18 வயதுக்குக் கீழுள்ள ஊனமுள்ள குழந்தைக்கு 100 டொலர்கள் வரையிலும் தகுதியுடைய செலவுகளில் 500 டொலர்கள் வரை திரும்பப் பெற உரிமை கோரலாம்.
- இந்த வரவு விரிந்த எல்லையிலான நடவடிக்கைகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

இது முற்றிலுமாகத் திருப்பிப் பெறக்கூடியது, ஆகவே நீங்கள் குறைந்த வருமானம் உடையவராக இருந்தாலும் மேலும் நீங்கள் வருமானவரி செலுத்தாவிட்டாலும் கூட, ஆதாயம் பெறலாம்.

## உங்கள் ரசீதுகளை வரி காலத்திற்காக பத்திரமாக வைத்திருங்கள்.

உங்களது 2010ம் ஆண்டு விவர அறிக்கை தொடக்கம் முதல், உங்களது வருடாந்திர வருமானவரி விவர அறிக்கையில் வரி வரவை நீங்கள் உரிமை கோரலாம், 2010, ஜனவரி 1ம் தேதி அல்லது அதற்குப் பின்னர் உள்ள தகுதியுடைய செலவுகள் தகுதி உடையனவாகும். உங்கள் ரசீதுகளைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டுமென்பதை நினைவிலிருத்துங்கள்.

- ஒவ்வொரு குழந்தைக்கும் 50 டொலர்கள் வரையிலும் அல்லது குழந்தை ஊனமாக இருப்பின் 100 டொலர்கள் வரையிலும் வரி வரவு வழங்கப்படும்.
- 1.1 மில்லியன் ஒன்டாரியோ குடும்பங்களில் உள்ள 1.8 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் ஆதாயம் அடைவர்.

## உங்கள் குழந்தை என்ன செய்ய விரும்புகிறது?

இந்த வரி வரவு இரண்டு வகையில் அடங்கும் விரிந்த எல்லையிலான நடவடிக்கைகளுக்கு வழங்கப்படக் கூடியதாகும்: தகுதி உடையவை மற்றும் தகுதி இல்லாதவை.தகுதி பெற, நடவடிக்கைகள் பாடத்திட்டப் புறச் செயல்களாகவும் கண்காணிக்கப்படுவதாகவும் குழந்தைகளுக்குப் பொருத்தமுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

- கால்பந்து, நடனம், சாரணர் பிரிவு, சிறுமியர் வழிகாட்டிகள், ஹாக்கி, நாடகம் மற்றும் கராத்தே உள்ளிட்டவை சில தகுதியுடைய நடவடிக்கைகளாகும்.நிகழ்நிலையில் இன்னும் அதிகமுள்ள பட்டியல் உள்ளது.
- கூட்டமைப்பு குழந்தைகளுக்கான தகுதியுடைய வரி வரவுக்கான தகுதியுடைய உடல்சார் நடவடிக்கைகள் இயல்பாகவே ஒன்டாரியோ குழந்தைகள் நடவடிக்கை வரி வரவுக்குத் தகுதி உடையனவாகும்.

மேலும் அதிக தகவல்களுக்கு வருகை புரியுங்கள்
**ontario.ca/kidscredit**

அல்லது தொடர்பு கொள்ளுங்கள்
**1 866 668-8297**

டிடிஒய்:
**1 800 263-7776**

ISBN 978-1-4435-5419-0